நாள் 20.02.2024 Mcop 32-2021 ம..சா.1 சேர்மராஜா

சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு சத்திய பிரமானம் செய்து வைக்கப்பட்டு 5ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

என் பெயர் சேர்மராஜா என்றால் சரிதான். என் ஓட்டுனர் உரிமத்தில் சேர்வைராஜா என்று தான் உள்ளது என்றால் சரியல்ல. சேர்மராஜா என்று தான் உள்ளது. நான் பெத்தநாடார்பட்டியில் வசித்து வருகிறேன். டிரைவராக வேலை செய்து வருகிறேன். என் ஊரில் சமூகசேகவன் என்ற தொண்டு நிறுவனத்தை நான் நடத்தி வருகிறேன் என்றால் இல்லை. நான் சொல்லி தான் என் வழக்கறிஞரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மனுவில் முதல் பாராவில் நான் சமூக சேகவன் என்ற தொண்டு நிறுவனம் வைத்திருந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் மனுவில் மேற்படி விபரத்தை சொல்லிவிட்டு தற்போது பொய்யாக இல்லை என சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்த அன்று நான் ஓட்டி சென்ற ஆம்புலன்ஸ் டிராஸ்டிற்கு சொந்தமான வண்டி என்றால் சரிதான். அந்த டிராஸ்டுக்கு நான் தான் டிரஸ்டி என்றால் சரியல்ல. அந்த டிரஸ்ட் என் பெயரில் தான் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விபத்து திருச்சி டூ சென்னை தேசிய நெடுஞ்சாலையில் அதிகாலை 4.30மணிக்கு நடந்தது என்றால் சரிதான். நான் சென்னை நோக்கி போய் கொண்டிருந்தபோது விபத்து நடந்தது என்றால் சரிதான். எனக்கு முன்பு சென்ற காரை 1ம் எதிர்மனுதாரர் ஓட்டி சென்றார் என்றால் சரிதான். எனக்கு பின்னால் டி.என்.72.என்.1924 என்ற அரசு பேரூந்தை 3ம் எதிர்மனுதாரர் ஓட்டி வந்தார் என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரரின் காரை நான் முந்தி செல்ல முற்படும் போது தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். என்னை தட்டிவிட்டார்கள். முன்னால் சென்ற காரின் மீது மோதி ஆம்புலன்ஸ் திரும்பி பின்னால் வந்த பஸ்சின் மீது மோதிவிட்டது என்றால் சரிதான். நான் தான் கவனக்குறைவாக வாகனத்தை ஓட்டி

விபத்தை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. விபத்து என் கவனக்குறைவால் தான் நடந்தது என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் திடீரென பிரேக் போட்டதால் நான் ஓட்டி சென்றஆம்புலன்ஸ் மோதியது என என் மனுவில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. மோட்டார் வாகன ஆய்வாளர் நான் ஓட்டிசென்ற வாகனத்திற்கு பிரேக் சரியாக உள்ளது என அறிக்கை வழங்கியுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 3ம் எதிர்மனுதாரர் என் மீது வேம்பர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான்.என் மீது தான் முதல் தகவல்அறிக்கை, குற்ற அறிக்கை பதிவுசெய்யப்பட்டது என்றால் சரிதான். குற்ற வழக்கு நிலுவையில் உள்ளதா முடிந்துவிட்டதா என்றால் அது தெரியாது. என் மீது பதிவுசெய்த குற்ற வழக்கை எதிர்த்து நான் மேல்முறையீடு செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு தெரியாது. நான் தொடர்சிகிச்சையில் இருந்தபோது அதை 3ம் எதிர்மனுதாரர் பயன்படுத்தி என்மீது புகார்கொடுத்ததாக சொல்வது உண்மையில்லை என்றால் சரியல்ல. நான் ஓட்டிசென்ற வாகனத்தை 5ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்துள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. அது டிரஸ்டுக்குரிய வாகனம். பாலிசியில் பி.ஏ கவரேஜ் செலுத்தப்படாததால் இழப்பீடு கோர முடியாது என்றால் சரியல்ல. மேற்படி பாலிசியானது 3ம் நபருக்குரியது என்றால் சரியல்ல. பிரிவு 166ன் நான் 5ம் எதிர்மனுதாருக்கு எதிராக இழப்பீடு கோர முடியாது என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயம் தற்போது குணமாகிவிட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கை பொறுத்தவரை நான் ஒரு தாட்பீசர் என்பதால் 5ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. எனக்கு 2,4 எதிர்மனுதாரர்கள் மட்டும்தான் இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. 5ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.